**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC.295/2023**

**Deposition of P.W.** 9

Name : திரு. பாலமுருகன்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated: **18.02.2026**

**Accused Present.**

முதல் விசாரணை–

நான் தற்போது திருநெல்வேலி மாவட்டம் நக்சல் சிறப்பு அலுவல் பிரிவில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் குலசேகரம் காவல் ஆய்வாளராக இருந்த போது 05.04.2023ம் தேதி 02.30 மணிக்கு குலசேகரம் காவல்நிலைய குற்ற எண்.62/2023 பிரிவுகள் 3(1) தமிழ்நாடு பொது சொத்துக்களை சேதப்படுத்தும் சட்ட படியான வழக்கை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடத்திற்கு அதிகாலை 03.00 மணிக்கு சென்று சாட்சிகள் ஜெகன் மற்றும் ராஜேஷ் ஆகியவர்கள் முன்பாக பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.5, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6. அதே இடத்தில் அதே சாட்சிகள் முன்னிலையில் கண்ணாடி துண்டுகள் மற்றும் கருங்கல் ஆகியவற்றை அத்தாட்சியில்

கைப்பற்றினேன். அந்தஅத்தாட்சி அ.சா.ஆ.7. அத்தாட்சியில் கைப்பற்றிய சொத்துக்களை படிவம் 95 தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 95 அ.சா.ஆ.8. கண்ணாடி துண்டுகள் சா.பொ.1, சிறிய கருங்கல் சா.பொ.2. பின்னர் சம்பவ இடத்தில் சாட்சிகள் ராஜன், ஸ்ரீகலா, பாலசந்திரன் ஆகியவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் பின்னர் காவல்நிலையத்தில் வைத்து சாட்சிகள் சுரேஷ்குமார், ஜெயசீலன் ஆகியவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 19.05.2023ம் தேதி திருவட்டார் பணிமனை சென்று சேதமதிப்பு சான்று வழங்கிய சாட்சி ஜெயக்குமார் என்பவரை விசாரித்து சேதமதிப்பு சான்று பெற்றேன். முதல் தகவல்அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது விசாரணையை முடித்து 19.05.2023ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

பார்வை மகஜரில் சம்பவ இடத்தில் சேகரிக்கப்பட வேண்டிய தடயங்கள் ஏதும் இல்லை என்று எழுதி ஏதும் இல்லை என்பதை அடித்துள்ளோம் என்றால் சரியாக தெரியவில்லை. நான் சம்பவ இடத்தில் சான்று பொருட்களை கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. காவல்நிலையத்தில் வைத்து ஆவணங்கள் அனைத்தும் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும், வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.